UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED [illegible]
PERIODICALS DIVISION

பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 யாழ்ப்பாணம் | மார்கழி 10 வியாழக்கிழமை | ஸபர் 16 | இதழ் 316 25 - 12 - 80

## நைஜீரிய நகரில் கலகம்; 300 பேர் கொலையுண்டனர்

லண்டன், டிச. 2

நைஜீரியாவில், தானு நகரில் ஏற்பட்ட கலவரங்களில், சுமார் 300 பேர் கொலைசெய்யப்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் குறிப்பிட்ட நகரில் கடந்த வியாழக்கிழமை கலகம் மூண்டது. தீவிரவாத சமயப்பிரிவு, இக்கலகத்தைத் தூண்டியதாக அறிவிக்கப்பட்டது. கலகத்தை அடக்க இராணுவம் உஷார்படுத்தப்பட்டிருக்கும் அதேவேளை; கலகம் மேலும் பரவாமல் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிபர் விமானப்படைக்கு உத்தரவிட்டுள்ளார்.

## ரஷ்யா 8 விண்கலங்கள்

மாஸ்கோ, டிச. 24

சோவியத் யூனியன் நேற்று எட்டு ஆளில்லாத விண்கலங்களை விண்வெளிக்கு அனுப்பியதுஎன்று அறிவிக்கப்பட்டது.

# கலவான எம். பி. விவகாரம் உயர்நீதிமன்றம் செல்லும்?

## ஜனாதிபதிக்கு 'அமிர்' 'மைத்திரி' 'சிவா' கடிதம்

(கொழும்பு)

கலவான தொகுதி விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் ஜனவரி மாதம் 6ம் திகதி பிரதமர் சமர்ப்பிக்கவுள்ள சட்ட விதிகள் குறித்து அவசியமேற்படும் பட்சத்தில் உயர்நீதிமன்றம்வரை செல்லவேண்டி ஏற்படலாம் என்பதால், இச்சட்ட மூலம் பற்றி ஆராய்வதற்கு வசதியாக அதன் விபரங்களை போதிய காலஅவகாசத்துடன் தமக்குத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சியினர் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் சுதந்திரக்கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் கலவான எம். பி. விவகாரம் குறித்து நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட சட்டவிதிகள் குறித்த விபரங்களை அச்சட்டவிதிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு 7 நாட்களுக்கு முன்னர் வர்த்தமானியில் பிரசுரிக்குமாறு அவர்கள் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் கலந்து கொள்ளாது எதிர்க்கட்சியினர் ஓடிவிட்டனர் என்று ஜனாதிபதி ஹோமகமவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியிருந்தது குறித்தும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

விவாதத்திற்குப் பயந்து ஓடுவது எமது வழக்கமல்ல. நாம் கேட்பது என்னவெனில் அரசின்சட்ட நடவடிக்கைகளில் நாமும் கலந்து கொள்வது அர்த்தமுள்ளதாக இருப்பதற்கு எமது நியாயமான கோரிக்கைகளையும் நீங்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

### நத்தார் வாழ்த்து!

வாசக நேயர்கள், விளம்பர தாரர்கள், மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் 'ஈழநாடு' தனது நத்தார் வாழ்த்துக்களைத்தெரிவித்துக் கொள்கிறது.

## யாழ். மாவட்ட அமைச்சரின் நத்தார் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

''மனித இனத்திற்கு சேவை செய்வதையே தனது பணியாகக்கருதி, சமய அனுட்டானங்களை பெரிதும் பேணிக் கடைப்பிடித்து வாழ்கின்றவர்கள் கிறிஸ்தவர்கள், அவர்களுக்கு எனது உளங்கனிந்த கிறிஸ்மஸ் வாழ்த்துககளைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்''

இவ்வாறு. யாழ்.மாவட்ட அமைச்சர் திரு.யு.பீ. விஜயக்கோன் யாழ். மாவட்டத்தில் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்களுக்கு விடுத்துள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''உலகெங்கணும் வாழ்கின்ற கிறிஸ்தவ பெருமக்கள் யேசுகிறிஸ்து பெருமான் அவதரித்த நாளாகிய கிறிமஸ் தினத்தை விமரிசையாக இன்று கொண்டாடுகின்றனர். மகிழ்ச்சிகரமான இச் சிறந்த நாளிலே நானும் யாழ். மாவட்டத்திலே வாழ்கின்ற கிறிஸ்தவ மக்களுக்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்களை அளிக்க விரும்புகின்றேன். இப் பெரு மக்களின் மத்தியில் நான் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக மாவட்ட அமைச்சர் என்றவகையில் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

மனிதஇனத்திற்கு சேவையே தமது பணியாக கருதி சமய அனுட்டானங்களைப் பெரிதும் பேணி, கடைப்பிடித்து, நம்பி வாழ்கின்ற கிறிஸ்தவ மக்கள்

(8ம் பக்கம் பார்க்க)

### விவசாயிகள் கிளர்ச்சி விவகாரம்:

## "தி.மு.கழகத்தைச் சாடுவது எம். ஜி. ஆருக்கு பழக்கமாகிவிட்டது!"

### கலைஞர் கருணாநிதி சீற்றம்!

சென்னை, டிச. 24

"தமிழ்நாட்டில் யார் கோரிக்கை எழுப்பினாலும், யார் போராட்டம் நடத்தினாலும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் இப்படித் தூண்டிவிடுகிறது என்று திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கூறி; மக்களைத் திசைதிருப்புகின்றார். 'இது'. திரு. எம். ஜி. ஆருக்கு வழக்கமாகிவிட்டாலும், இப்போக்கை அவர் மாற்றிக்கொள்ளவேண்டும்.''

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் கண்டனம் தெரிவித்தார்.

திரு. நாராயணசாமி நாயுடுவின் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்துக்கும் தி. மு. கழகத்துக்கும் தொடர்புகளே கிடையாது என்று கூறிய தி. மு. க. தலைவர்;

விவசாயிகள் சங்கம்

''தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கட்சிசார்பற்றது. தேர்தல் காலத்தில், திரு. எம் ஜி ராமச்சந்திரன் விவசாயிகளுக்கு அளித்த உறுதி மொழிகளை நிறைவேற்றுமாறு விவசாயிகள் இப்பொழுது கோருகின்றனர். விவசாயிகளது இக்கோரிக்கைக்கும், தி. மு. கழகத்துக்குமிடையே 'முடிச்சு'ப் போட்டு, திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கூட்டங்களில் பேசி வருகின்றார். இது முறையற்றது'' என்றார்.

(8-ம் பக்கம் பார்க்க)

### பாலுக்குள் உப்பு

சென்னை, டிச. 24

தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் விவசாயிகள் கிளர்ச்சியை ஒட்டி சென்னைக்கு சுமார் 500 லீட்டர் பாலை ஏற்றிக் கொண்டு வந்த 'பௌஸரை' மறித்த கிளர்ச்சியாளர்கள் பாலுக்குள் பெருமளவில் உப்பைக் கலந்துவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளையில் கிளர்ச்சி தொடர்பாக அடுத்து 3 ஆயிரம் விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

எமது ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

27% வரை வட்டி வழங்குகின்றோம்.

இலங்கையில் மிகக்கூடிய கிளைகளையும் 40 வருட அனுபவத்தையும் உடைய ஒரே தனியார் நிதி நிறுவனம்.

TFC

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
191-249/c, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7680

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடு' வளவு விற்பனைக்கும், பெண்களுக்கு மட்டும் சாப்பாட்டுடனும் தனித்தும் அறைகள் வாடகைக்கும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சி. கனகரெத்தினம், [465/1. கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். 7666

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் காலியான நிலையில் நாலு அறைகளுடன் இரண்டு பரப்பில் புதிய வீடு. யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியாக மூன்று பரப்பில் மூன்று அறைகளுடன் ஒரு வீடு விபரங்களுக்கு: வே நடராசா (மனேஜர்), H. P. T. Ltd, (Jaffna Branch), 3, நவீனசந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம். போன்: 7698. (7740)

## விற்பனைக்கு

யாழ்ப்பாண பெந்தேகோஸ்தேரிற்கு அருகில் கண்டி ரோட்டில் கிணற்றுடன் 2 லாச்சம் காணி உடனடி விற்பனைக்குள்ளது. திருமதி V. A. நடராஜா, 86, கண்டி ரோட்டன் தொடர்புகொள்ளவும். 7753

இறைச்சிக் கோழிகள் சில்லறையாகவும் தொகையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். அண்ணா விவசாயப்பண்ணை, புகையிரதவீதி, இணுவில். அண்ணா விற்பனை நிலையம், பசார்லேன், யாழ்ப்பாணம், 7720

மிற்சுபிசி 4 DR 50 A டீசல் என்ஜின், டொயோட்டா 2 J டீசல் என்ஜின் (டொயோட்டா கையேசுக்கு ஏற்றது) உன்னத நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்புகொள்ளவும்: சாந்தி ரயர் வேக்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8085. (7745)

## மன்னாரில் இலவச பாடநூல் விநியோகம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கான இலவச பாடப் புத்தக விநியோக வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

மன்னார் முருங்கன் மாந்தை வட்டாரக் கல்வி அதிகாரிகள் இவ்வேலைகளைக் கவனித்து வருகின்றனர். மன்னார் மாவட்டப் பாடசாலைகளுக்கான இலவசப் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கும் வேலைகள் யாவும் மன்னார் மாவட்ட பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். சரீ மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது. (…)

## விற்பனைக்கு

காங்கேசன்துறை பட்டின சபைக்கு அண்மையாக - பிரதான வீதியில் 6 அறையுடன் சகல வசதிகளும் அடங்கிய புத்தம் புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. காணி 2 பரப்பு தொடர்புகொள்ளவும்: ஜெ-தி மஹால், கீரிமலை வீதி, காங்கேசன்துறை. 7701

## குளங்கள் புனரமைப்பு

(துணுக்காய்)

வவுனிக்குளம் பாரிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழுள்ள பனங்காமம்குளம், பாண்டிகுளம், கொல்லவிளான்குளம், மல்லாவிக்குளம், தென்னியன்குளம், முருகண்டிக்குளம், மருதன் குளம் ஆகிய குளங்களைப் புனரமைப்புச் செய்து நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இப்பகுதி விவசாயிகளின் தண்ணீர்ப்பற்றுக்குறை நீக்கப்படுவதுடன் விவசாய நடவடிக்கைகளும் அதிகரிக்கப்படவுள்ளன மேற்படி அபிவிருத்திவேலைகளை வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. ஜே. ஜெய்ராஜ் மேற்கொண்டு வருகின்றார். (அ)

## கதாப்பிரசங்கம்

(மானிப்பாய்)

நல்லை ஆதீன குருமகாசன்னிதானம்ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் சங்கீதகதாப் பிரசங்கம் நாளை வெள்ளிக்கிழமை மானிப்பாயில் நடைபெறவுள்ளது

மானிப்பாய் இந்து அபிவிருத்திச்சங்கத்தின் ஆதரவில் மானிப்பாய் மருதடி கோவிலில் சுவாமிகள் அன்று மாலை ''திருமுறை தந்த கணபதி'' என்னும் பொருள் பற்றிக்கதா காலட்சேபம் செய்வார். (அ)

## பிஸ்கால் விற்பன்வு

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

முத்து ஆறுமுகம், கரவெட்டி வடக்கு, கரவெட்டி. வழக்காளி

வழக்கு இலக்கம்: 14334.

எதிராக

கணபதிப்பிள்ளை நடராசா, தனக்காகவும் பராயமற்ற அவரது பிள்ளைகள் (1) வாஜினி (2) சுபாஜினி (3) புஸ்பராஜா என்பவர்களுக்காவும், எல்லோரும் கரவெட்டி மேற்கு கரவெட்டி. எதிராளி,

மேற்சொல்லப்பட்ட எதிராளிகள் மேற்சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1979ம் ஆண்டு தைமாதம் 17ந் திகதியின் தீர்வையின்படி ரூபா 9150/-ம் இன்னும் 1978-02-21 இலிருந்து 1979 01-17ம் திகதி வரை ரூ 5000/- மீதான 12% வட்டி ரூ. 550/-ம் 1979-01-17ந் திகதியிலிருந்து 1980 12-31 ஆந் திகதி வரை 9% சட்ட வட்டியும், செலவு ரூபா 751-22½ சதத்திற்கும், இன்னும் மேலதிக செலவாக ரூபா 448 50ம் இதற்காக எதிரிகளுடைய கீழே சொல்லப்படும் ஆதனங்களில் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1981ம் ஆண்டு தை மாதம் 30ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 00 மணிக்கு குறித்த ஆதனத்திலிருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்.

### விற்பனை செய்யப்படும் ஆதனங்களின் அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று கரவெட்டி வென்றிக் குறிச்சியிறை அத்துளு தெற்கு நிபர 27 எல்லை கிழக்கு அத்துளு கண்ணகையம்மன் கோவிலாதனம் வடக்கு வீரவாகு முதலியார் சிற்றம்பல முதலியாரின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரியவாதனம் மேற்கு சம்பு பெண் பிலிப்பாச்சிக்குடையவாதனம் தெற்கு நடைவாம்பு இதடங்கலிற் சொரியலாய் நெற். பர. 8 (எட்டு) இவ்வாதனத்தில் ரூபா 4000/-ஐ விக்காத தொகையை அறவிடவேண்டும்,

1970.9.13ல் நொத்தாரிசு க. கு. பாலசுப்பிரமணியம் முகதாவில் முடிந்த 3971ம் இலக்க உறுதியில் காண்பித்த ஆதனங்கள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவில்பற்று கரவெட்டி குறுளிக் குறிச்சியிறை:-

1. தலையாட்டி சீமா நி. பர 15½. இதில் மேற்கரைவாசிக்குரிய நிபர. 7 3/4 இதில் நடுப்புற நாற்பதில் இருபது பங்குக்கு நிபர 3 குளி 15 3/4 இதில் தெற்குப் புறமாக நிபர 2 நீக்கி வடக்குப்புறமாக நிபர 1 குளி 15 3/4 கடைக்கட்டிடமும் எல்லை கிழக்கும் வடக்கும் பின்னுற்காணும் 2ம், 3ம் ஆதனங்கள் மேற்கு ரோட்டு தெற்கு ஒழுங்கை இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும்,

2. மேற்படி தலையாட்டிசீமா நிபர. 15½. இதில்கிழக்குப்பக்கமாக அரைவாசிக்காக நிபர 7 3/4 வடலிகள் வேம்பு, கல்வீடுகிணறும் எல்லை கிழக்குகை ஒழுங்கையும் சங்கரப்பிள்ளை கந்தரின் உரிமைக்காரக்குடைய வாதனம் வடக்கு குமாரசாமி பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம் மேற்கு மேற்குறித்த 1ம் ஆதனமும் ஒழுங்கை முகப்பும் மறு ஆதனமும் தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் வடலிகள் வேம்பு கிணறு இவைகளில் சொரியலாய் மூன்றிலொரு பங்கில் அரைவாசியும் இக்காணிக்குட்பட்ட கல்வீட்டில் சொரியலாய் அரைவாசியும்

3. மேற்படி தலையாட்டி சீமா நிபர 15½ இதில் மேற்குப்புறமாக அரைவாசிக்குள்ள நிபர 7 3/4 இதில் வடக்குப் புறமாக எண்பதிலொரு பங்கு குளி 1 119/160 எல்லை கிழக்கு மேற்குறித்த 2ம் ஆதனம் வடக்கு சின்னபா சின்னத்தம்பிக்குடைய வாதனம் மேற்கு ரோட்டு தெற்கு மேற்குறித்த 1ம் ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் மூன்றிலிரண்டு பங்கிலரைவாசியும்.

வே கணபதிப்பிள்ளை
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.
பருத்தித்துறை.
1980.11.23

7743

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### 1981-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1981 தொடக்கம் 31-12-1981 வரையிலான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடுவனவற்றிற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 29-12-1980ம் திகதி மு. ப. 9-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அட்டவணை-1

| வியாபாரம் | கடை இல. | சென்றவருடம் ஏற்றுக்கொள்ளப்பட்டகேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. ஆட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ்.1 | ரூ. 20000/- | ரூ. 500/- | ரூ. 25/- |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ்.2 | ரூ. 21000/- | ரூ. 500/- | ரூ. 25/- |
| 3. பலசரக்கு/களஞ்சிய அறை/சலவைத் தொழிற்சாலை | என்.எம்.எஸ்.3 | ரூ. 910/- | ரூ. 100/- | ரூ. 25/- |
| 4. ,, ,, ,, | என்.எம்.எஸ்.4 | ரூ. 1112/- | ரூ. 100/- | ரூ. 25/- |

மேற்படி வைப்புப்பணமும் கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 26-12-1980ம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும் படிவத்திலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணம் திருப்பித் தரப்படமாட்டா. சித்திரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும், கேள்விவைப்புப்பணம் திருப்பித் தரப்படும். கேள்விவைப்புப்பணமும் படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விகள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். அல்லது பதிவுக்கடிதம் மூலம் அனுப்பப் படலாம். எவற்றிற்கு கேள்வி விடுக்கப்படுகிறது என்ற விபரம் கேள்விகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையுமோ எவற்றையேனுமோ ஏற்றுக் கொள்ளும் நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகர சபைத் தலைவருக்குண்டு.

சென்ற வருடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித் தொகையிலும் பார்க்கக் குறைவான கேள்விகள் ஏற்றுக கொள்ளப்படமாட்டாது.

இரு ஆட்டிறைச்சிக் கடைகளின் சித்திகர கேள்விக்காரர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்த பின்பே இக்கடைகளில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவர். ஒரு கடையின் சித்திகர கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்து மற்றைய கடையின் சித்திகர கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்யாதுவிடின், இரு கடைகளின் கேள்விகளும் இரத்துச் செய்யப்பட்டு, புதிதாகக் கேள்விகள் கோரப்படும். இரு கடைகளுக்குமான ஒப்பந்தங்கள் செய்தபின் எக்காரணம் கொண்டும், ஒரு கடையின் ஒப்பந்தம் இரத்துச் செய்யவேண்டி நேரிடின், மற்றைய கடையின் ஒப்பந்தமும் இரத்துச் செய்யப்பட்டு, இரு கடைகளுக்கும் மீண்டும் புதிதாக கேள்விகள், கோரப்படும்.

மேலதிக விபரங்கள் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். கே. திரவியநாயகம்,
தலைவர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
19-12-1980.

7744

அனைவருக்கும் அன்புகலந்த நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

★ யாழ். நகரில் நத்தார்-புதுவருட மலிவு விற்பனை ★

● நாசனல் பனசோனிக் (National Panasonic) றேடியோக்கள். றேடியோகசட், தனிக் கசட்டுகள் ● பிக்ஸ்ரோன் (Bigstone) கசட், கசட் றேடியோக்கள் ● செனிக் (Senic) றேடியோ ● எலக்ட் (Elect) றேடியோ ● சுசுக்கி (Suzuki) றேடியோ ● ஸ்கைறோ (Skyro) றேடியோ ● மக்ஸல் (Maxel). அக்வா (Agfa) ரீடிகே (T D K), சங்கி (Sanki), கசட் வகைகள்...

சகலவிதமான ஒலிப்பதிவு வேலைகளுக்கும் யாழ். நகரில் முன்னணி ஸ்தாபனம். V. P. P. கவனிக்கப்படும்.

நாஷனல் பனசோனிக் தயாரிப்புக்களுக்கு யாழ்ப்பாணப்பகுதி விநியோகஸ்தர்கள்:

றேடியோஸ் பதி

58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7805

# சிங்கைத் தேர்தலில் லீ பெருவெற்றி!

சிங்கப்பூர் டிச. 24 சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும்கட்சி மகத்தான வெற்றியீட்டியுள்ளது.

சிங்கப்பூரில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை பொதுத் தேர்தல் நடைபெறுகிறது இம்முறைத் தேர்தலில் சுமார் 6லட்சத்து 50,000 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் மொத்தம் 75 ஆசனங்கள் உண்டு. நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டபோது முப்பத்தேழுபேர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர். மிகுதி முப்பத்தெட்டுத் தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றபோது பிரதமர் திரு லீ குவான் யூவின் மக்கள் நடவடிக்கைக் கட்சி முப்பத்தெட்டுத்தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. இதன் மூலம்; 1968 ம் ஆண்டு முதல் கடந்த பன்னிரண்டு வருடகாலத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் திரு. லீ குவான் யூ தொடர்ந்து பதவியிலிருக்கும் பெருமையைப் பெறுகின்றார்.

## கைது!

சென்னை, டிச '24 தமிழக விவசாயிகளின் உத்தேச மறியல் போராட்டம் தொடர்பாக, முன் நடவடிக்கையாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக

## மின்சாரம் பாவித்தனராம்

(உடுப்பிட்டி)

சட்டவிரோதமாக மின்சாரம் பாவித்தவர்கள் பருத்தித்துறைப் பொலிசாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

நெல்லியடிப் பட்டினசபைப் பகுதியிலுள்ள ஐமூலை வீதியிலிருக்கும் வீடொன்றில் சட்டவிரோதமாக வீதி மின்னிணைப்பிலிருந்து மின்சாரம் பெற்று மின்சாரத்தைப் பாவித்துக்கொண்டு வந்தனராம்.

இதுசம்பந்தமாக நெல்லியடிப் பட்டினசபை. பருத்தித்துறைப் பொலிசாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து பொலிசார் விரைந்துசென்று கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டனர். பிரஸ்தாப சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தொடர்ந்து விசாரணைசெய்து வருகின்றனர். (அ)

## மீண்டும் பொலிசார் தேடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவில் வீடொன்றுக்குள் புகுந்து ரொக்கப்பணத்தையும், பொருட்களையும் திருடிச்சென்ற மூவர் கொண்ட கோஷ்டியை தேடிப் பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

பளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த தர்மக்கேணி என்னுமிடத்திலேயே இத்திருட்டு நடைபெற்றது. இதுசம்பந்தமாக க. செல்லையா என்பவர் பளைப் பொலிசில் செய்துள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சம்பவதினம் நான் கமத்திற்குச் சென்றுவிட்டு இரவு 12 மணியளவில் வீட்டுக்கு வந்துவிட்டேன். விடிந்து எழுந்துபார்த்தபோது வீட்டில் வைக்கப்பட்டிருந்த ரொக்கப் பணம் 800 ரூபாவும் வேறு பெறுமதிமிக்க பல பொருட்களும் திருடப்பட்டுள்ளது தெரியவந்தது. மூவர் மீது எனக்குச் சந்தேகம் உண்டு"

பொலிசார் இத்திருட்டு சம்பந்தமாக மூவரைத்தேடி வலை விரித்துள்ளனர். (கொ

## பிரதமர் வருகைக்காக வீதி திருத்தம்

(உடுப்பிட்டி)

நெல்லியடி சரவெட்டி பகுதிகளில் மிகவும்சீர்கேடான நிலையிலுள்ள பல பிரதான வீதிகள் விரைவில் திருத்தப்படவுள்ளன.

அடுத்தமாத இறுதியில் கரவெட்டி- கன்பொல்லை மாதிரிக் கிராமத்தைத் திறந்துவைப்பதற்காக கரவெட்டிக்கு வருகைதரவுள்ள பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸாவின் விஜயத்தைமுன்னிட்டே பிரஸ்தாப வீதிகள் திருத்தியமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. (அ)

## ஆட்சேபம்

(மன்னார்)

மன்னார் முஸ்லிம் மையவாடிக்கருகில் மலசலகூடம் நிறுவப்படுவதை ஆட்சேபித்து உப்புக்குளம் வட்டார முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். (

## 7 பேர் உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒ ஸாலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட மின்னொளி உதைபந்தாட்ட நொக்அவுட் சுற்றுப்போட்டி ஜனவரி 1, 2, 3, ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது. கால் இறுதி, அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் மின்னொளியில் நடைபெறும்.



## பாலகனடி சேர்வோமே

— முல்லைக்கவி —

காரிருள் குவிந்து காணக்
கடும்பனி குளிருங் கூட
மார்கழி மாதம் தன்னில்
மவெளி மரியா வீன்ற
சீர்பெறு ம்தவ மைந்தன்
சிறுமையோ டவத ரித்தார்
பாருளோர் கூடி ஞானப்
பாலக னடிசேர் வோமே.

இறைமக னெம்மைத் தேடி
இனிதுடன் வந்திட் டாரே
நிறைவுள நெஞ்சத் தோடு
நிமலனைத் தொழுதே போற்றிக்
கறைகளைப் போக்கிப் பாவக்
கயமையை யகற்ற வல்ல
இறைவனை யுள்ளத் தேற்றி
இருளினை யகற்று வோமே.

பஞ்சமா பாத கங்கள்
பஞ்செனப் பறந்தே யோட
வஞ்சகம் சூது பொய்மை
வாழ்ந்திடா தஞ்சி யோட
நெஞ்சகக் கோயில் கொண்டே
நேர்வழி காண மாந்தர்
துஞ்சிடா திங்கு வந்தார்
தூயவ னடிசேர் வோமே.

மிஞ்சிடும் பாவ மாய்கை
மேதினி மீது கண்டு
அஞ்சிடா மக்கள் வாழ்வு
அதனுளே யமுந்தல் கண்டு
தஞ்சமாய் பணிக்க வந்தார்
தயைநிறை கருணை வள்ளல்
கெஞ்சியே யிரந்து கேட்பின்
கேடுகள் தொலைந் தேற் றாரே.

நிதான விலை! நம்பிக்கை!
பல வருட காலமாக எமக்கு ஆதரவு தந்து
வணக்குவித்த அன்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும்
எமது மனப்பூர்வமான
நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக
கமலா ஸ்ரோர்ஸ்
123, பாங்ஷால் வீதி — யாழ்ப்பாணம்.
போன்: 7148
கிளை:
கவுரி போறேஜ் ஸ்ரோர்ஸ்
5, நியூமார்க்கட் — ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் நலமான
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்!
★ அபிஷேகச் சாமான்கள்
★ அத்திபாரச் சாமான்கள்
★ விவாக முகூர்த்தப் பொருட்கள்
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகல மருந்துச் சாமான்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை, (போன்:7135) யாழ்ப்பாணம்-

நீங்கள் "பிடுங்க" வேண்டியதில்லை

உங்களுக்குத் தேவையானது
லங்கெம் 3,4 DPA மட்டுமே.
நம்பிக்கையான, மலிவான,
சகல-தேவை களைக்கொல்லி.
உங்கள் நெற்பயிரைப்
பாதுகாத்துக் கொள்ளுங்கள்,
அமோக விளைச்சலைப்
பெறுங்கள். நெற்பயிருடன்
வளரும் சகல வித
புல்லுகள், கோரைகள்,
அகண்ட இலைக்களைகள்
ஆகியவற்றை அறவே அழிக்க
உபயோகியுங்கள்.
லங்கெம் 3,4 DPA






தொடர்பு கொள்ளுங்கள்: லங்கெம் 760, பேஸ்லைன் றோட்டு, கொழும்பு 9. தொலைபேசி: 96732-6

450 மி. லீ. ரூ. 39/75

அனைவருக்கும் மகிழ்லூட்டும்
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
உங்கள் குழந்தைகளின்
மழலைச் சிரிப்பைக் கண்டு கழிக்க
"செல்லப்ஸ்"
படம்பிடிப்பவர்கள்
94, 96, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம். - போன்: 436

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ்-புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
இனிக்க வாழவேண்டுமானால் காலம் பூராகவும் கல்யாணி ஐஸ்கிறீமில் திளைக்கவேண்டும்.
அமுதும் தேனும் சுவைப்பவர்களுக்கு கல்யாணியின் இனிப்பு வகைகள் அலாதி
கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8077

# கிறிஸ்தோதய பண்புகள் சிறக்கட்டும்

மணிவாக்கு

மாருதபக்தியும் உறுதியான விசுவாசமும் உனக்கு அருளுமாறு வேண்டி ஜகன்மாதாவை பிரார்த்தனை செய்வாயாக!

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### நத்தாரும் நாமும்

"இந்த உலகத்தைக் கடவுளின் ராஜ்யமாகவும் அவருடைய நீதிக்கு உறைவிடமாகவும் செய்யுங்கள்"

இந்த விவிலிய வாசகத்தைப் பீடிகையாகக் கொண்டு பிரசங்கித்த பாதிரியாரைப்பார்த்து "சுவாமி இந்தப் போதனை நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது. மக்கள் திருந்தியிருக்கின்றனரா?" எனக் கிண்டிக் கேட்டான் ஓர் இளைஞன். சற்றுமே தளராத போதகர் அந்த இளைஞனின் அழுக்கடைந்த முகத்தைப் பார்த்து, "தம்பி, தண்ணீர் கிறீஸ்துநாதருக்கே முந்தினது. இருந்தும் உம்முடைய முகம் எந்நிலையில் இருக்கிறது என்றார்.

இன்றைய நத்தார் கொண்டாட்டத்தில் இச்சம்பவம் எம்மைச் சிந்திக்க வைக்கும் நத்தார் எங்கே? நாமெங்கே? இன்னும் இருபது வருடங்களில் 21-வது நூற்றாண்டில் வாழும் பொறுப்புடையவர்கள் எமது இளைஞர்கள்.

கடவுளின் ராஜ்யம், அவருடைய நீதி எந்த நாட்டில் காணும் வாய்ப்பு ஏற்படுகின்றது?

ஆயினும் இந்தக் கேள்வி சந்ததி சந்ததியாகக் கேட்டு வரப்பட்ட கேள்விபோல் தோன்றுகிறது. காலஞ் செல்லச்செல்ல உலகம் கெட்டுப்போகிறது என்ற முணுமுணுப்பு எப்போதும் இருந்து வருகிறது.

இதைக்குறித்து நாம் தேற்றமடைவதற்கில்லை. எந்த இருள்நிறைந்த கட்டத்திலும் நம்பிக்கைஒளி வீச நன்மை பயக்கும் சக்திகள் தொழிற்படாமலில்லை.

நாம் மேலே குறிப்பிட்ட வேதவாக்கியம் நெஞ்சை அள்ளும் கருத்துடையது. அதில் பொதிந்து கிடக்கும் உணர்ச்சியை அறிந்து போற்றத் தவறிய உலகம் என்றுமே அமைதியை அடையமாட்டாது.

நாம் நேற்றுக் குறிப்பிட்டபடி கிறீஸ்து பெருமான் ஒரு ஆசியநாட்டில் அவதரித்தவர். மனித சமுதாயத்திற்கு உபதேசம் செய்ய உலகத்தில் தோன்றிய மதாசிரியர்கள் அனைவரும் ஆசியர்களே; ஆசியப்பண்பாடு உலகின் ஆன்மீகச் சொத்து.

உலகம் சுருங்கி, விஞ்ஞான வளர்ச்சியால் ஒரு சிறு நாடுபோல் இயங்கி வரும் இக்காலத்தில் ஆசியப்பண்பாடு ஒன்றுஉண்டா என்று கேட்பாரும் உளர். அது நியாயமான கேள்வி.

இக்கேள்விக்கு ஆதாரமான கருத்தையே நாம் வற்புறுத்த முயல்கிறோம். கிறீஸ்துநாதர் செய்த மலைப்பிரசங்கத்தின் சாராம்சத்திற்கும் தற்காலத்தில் மேலைநாட்டினர் கையாளும் முறைகளுக்கும் நாம் வேறுபாடு காணும் ஆற்றலை இழந்துவிட்டோம்.

தேவைகளைப் பெருக்கிக் கொண்டு, அவற்றிற்கு வசதிசெய்யும் பணியில் வாழ்நாளைக் கழிக்கும் நாம் இன்றைய நற்றினத்தில் சற்றே திரும்பிப் பார்த்தல் நலம். புராதன காலத்தில் நம்மவர்களிடம் காணப்பட்ட எளிமையை எவ்விதத்திலும் கடைப்பிடிக்கும் நிலைமை தவிர்க்கமுடியாத தொன்றாகும்.

நாம் இன்று ஜெபிக்கும் வாழ்க்கைத்தரம் என்ற மந்திரம் அதற்காகநாம்கையாளும் கஞ்சாக் கடத்தல், கறுப்புச் சந்தை போன்ற நவீன தந்திரங்கள் எவையுமே மேனாட்டின் இறக்குமதிப் பொருட்கள்,

சரித்திரத்தில் இடம் பெற்ற யுத்தங்கள் அனைத்தும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் ஏகாதிபத்தியப் போட்டியின் விளைவே. ஆசிய ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் இழந்ததும், தரித்திர வாழ்வில், தங்கள் நாகரிகம் பண்பாடு மறைந்ததும் இவ்வித பொருளாதார ஆதிக்கப் போட்டியாலே.

சுதந்திரமடைந்த ஆசிய நாடுகள் தங்கள் தேசியப் பண்பாட்டின் அடிப்படையில் வாழ முடிகின்றதா? மனழவிட்டும் தூவானம் நிற்கவில்லை.

இப்பூமியிலே எத்தனையோ ஏழை எளியவர்களும், தாழ்மையானவர்களும் உண்டு. பசியால் வாடும் கூட்டம் பெருகி வருகிறது. செல்வர்கள் ஒரு சிலரே. இவர்களே ஒருவித வேகத்தையும் பகட்டையும் பரப்பிவருகின்றனர். அவர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற முயலும் பலரே எமது சமூகத்தின் சாபக்கேடாகும்

கிறீஸ்து நாதர் போதித்த கருணையைக் கடைட்பிடித்தொழுக வேண்டுமானால், இந்த ஏழைகளுக்குக் கிடைக்காத பொருள்களை வைத்துக்கொள்ள நாம் ஆசைப்படலாகாது

கிறிஸ்மஸ் திகதி என இன்று நிர்ணயிக்கப்பட்டுள்ள மார்கழி 25 ல் தான் கிறிஸ்து பிறந்தாரென்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பண்டை உரோமையர்கள் மாரியின் பின்ஆதவன் மீளவும் தென்படத் தொடங்கும் மார்கழிக் கடைசியை பண்பாட்டு விழாவாகச் சொலிஸ்டிக் எனும் பெயரில் கொண்டாடி மகிழ்ந்தனர். இதில் மார்கழி 2 சூரியனின் பிறந்தநாளாக விசேடித்துக் கொண்டாடினர் இந்நாளையே உலகின் ஒளியான கிறிஸ்து பிறந்த நாளாகக் பின்நாளில் கொண்டாடத் தொடங்கினர். எனவேதான் இதனைக் கிறிஸ்து பிறந்த நாள் என்பதிலும் கிறிஸ்து எனும் ஒளியின் வருகையின் நாளாக ஒளி விழாவாகக் கொண்டாடுவது அர்த்தமுள்ள ஒன்றாகக் கொள்ளப்படுகிறது

### கிறிஸ்மஸ் மரம்

கிறிஸ்து பிறப்புக்கும் கிறிஸ்மஸ் மரத்திற்கு மதரீதியான தொடர்பு எதுவுமே கிடையாது. கிறிஸ்து பிறந்து 1605ம் ஆண்டளவில் ஜேர்மனியில் கிறிஸ்மஸ் அன்று மரங்களில் பரிசுகளைடிக்கட்டித்தூக்கி அலங்கரித்துமகிழும் பழக்கம் நிலவியதாகக் கூறப்படுகிறது. ஆனால் 1840 ம் ஆண்டு இங்கிலாந்தின் பங்கிங்காம் அரண்மனையில் விக்டோரியா அரசியும், அல்பேட் மன்னனும் கிறிஸ்மஸ் மரமமைத்து அலங்கரித்து உதாரணம் காட்டிய பின்பே ஐரோப்பாவில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் பழக்கம் பிரபல்யம் பெற்றது.

### கிறிஸ்மஸ் பப்பா

ஜேர்மனி, ஆஸ்திரியா, பெல்ஜியம், ஹொலண்ட், போன்ற நாடுகளில் புனித நிக்கிலஸின் தினமான மார்கழி 6ம் நாள் அன்று பெரியவர்கள் நிக்கிலஸ் புனிதரைப்போல் சாம்பல் நிற உடை அணிந்து அலங்கரித்து சிறுவர்களுள் நல்லவர்களாக இருந்தவர்களுக்கும்பரிசளிக்கும் பழக்கம் இருந்துவந்தது. இதுவே பின்னர் அமெரிக்கா இங்கிலாந்துபோன்றநாடுகளில் சாந்தகுளோஸ் எனும் கிறிஸ்மஸ் பாப்பாவைத்தோற்றுவித்த கிறிஸ்மஸ் பப்பா ஜிங்கில் பெல்ஸ் ஜில்கில் ஜிங் எனக்கிறிஸ்தோதய மணிஒலியுடன் சிறுவர்களுக்குப் பரிசு காவி வருவதாக ஒரு நம்பிக்கை உருவாக்கப்பட்டது.

— பற்றிமாகரன் —

### கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்

கிறிஸ்மஸ் கார்ட் எனும் வாழ்த்து மடல் அனுப்பும் பழக்கம்கூட 1843 ம ஆண்டளவிலே இருந்தே பிரபல்யம்பெற்றுள்ளது. ஜோன் கல்கொட் ஹொஸ்லி என்பவரால்1843ல் வரையப்பட்ட முதல் கிறிஸ்மஸ் கார்டு லண்டன் நூதனசாலையில் காட்சிப் பொருளாக இன்றும் உண்டு,

### கிறிஸ்மஸ் பூ

ஈச்சம்பழம் போன்றுசிவத்த காய்கள் கிறிஸ்மஸ் விழாவில் எவ்விதம் புகுந்தது என்று பார்த்தால் அதற்கு ஒரு சிறு கதையும் உண்டு. பெபிட்டா என்னும் சிறுமி கிறிஸ்துவின் முன்னடியில் முன் காணிக்கையாக வைக்கவெனத் தன்னிடம் இருந்த ஒரு சிறுகிண்ணத்தை சுத்தம் செய்கையில் அது விழுந்து நொருங்கியது. இதனால் மனமுடைந்த சிறுமி துக்கத்தோடு ஆலயத்து நள்ளிரவு பூசைக்குப் போனாள் வழியில் எல்லோரும் பல அழகான மலர்களை ஏந்தி ஆலயம் நோக்கிச் செல்வதைக் கண்ட இச்சிறுமி வழியில் அகப்பட்ட தானியமான இவ்வீச்சம் கொப்பு போன்ற காய்மரத்தை பிடுங்கி எடுத்து சென்றுளாம். சிறுமி இதனைக் கொண்டு போய் பாலனகுடில் முன்வைத்ததும் அவை அழகான மலர்களாக மாறி ஒளி வீசினவாம் இதுவே இதற்கும் கிறிஸ்மஸுக்கும் இடைஉள்ள தொடர்பாகும்.

### கிறிஸ்மஸ் கரோல்

14ம் நூற்றூண்டிலிருந்தே கூட்டங் கூட்டமாக கிறிஸ்தோதய பெருமையைப் பாடும் வழக்கம் நிலவியது. ஆனால் இன்றோ கரோல் பெரும் ஆடம்பர வைபவமாக கலைவெளிப்பாடாக கருதப்படுகிறது. அத்தோடு பணம் சேர்க்கும் கரோல்களும் இன்று பலவுண்டு.

### கிறிஸ்மஸ் குடில்

பெத்லேகத்து மாட்டுத்தொழுவத்தில் கிறிஸ்து பிறப்புற்ற காட்சியை ஆலயங்களிலும் கோயில்களிலும் பாலன் குடிலாக அமைத்து மகிழ்வது இன்று சர்வசாதாரணம் இக்குடில் வைக்கும் பழக்கம் புனித சவேரியாரால் பரப்பப்பட்ட ஒன்று கிறிஸ்தோதயத்தின் கருத்தை வெளிப்படுத்தத் தோன்றிய பாலன்குடில் இன்று பல இடங்களில் பணத்தின் வெளிப்பாட்டைக் காட்டும் அடையாளச் சின்னமாகவே திகழ்கிறது.

### பண்பு மறைந்தது

இவ்வாறாக கிறிஸ்தோதயத்தோடு எவ்விதம் தொடர்பும் இல்லாத பல வழமைகள் கிறிஸ்து பிறப்பு நாளில் ஒன்று கலந்து காலகதியில் அவையே கிறிஸ்மஸ் ஆகி எளிமை-வறுமை-தியாகம் எனும்கிறிஸ்தோதயத்தின் உண்மைப்பண்புகள் மறக்கப்பட்டு வருகின்றன. எனவே இனிமேலாவது ஒவ்வொரு கிறிஸ்தவனும் வழக்கங்கள் பெருமைகள் தான் கிறிஸ்மஸ் எனும் வேதனை நிலையை மாற்றி கிறிஸ்தோதயத்தின் உயர்பண்புகளைக் கடைடபிடிக்க கிறிஸ்துஅவன் என் தன் அர்த்தத்தை நிலைநிறுத்துவார்களாக. தீயிடவே வந்தேன் என்ற யேசு மனித மனங்களில் சிந்தனைத் தீயை மூட்டி கிறிஸ்மஸ்ஸின் புனிதத்தை மனிதர்கள் உணர அருள் செய்வாராக! அந்த வேளை பாவ இருள் அகன்ற தினத்தை உலகின் முதல் புரட்சிக்குரல் எழுந்த தினத்தை அதற்கே உரிய விடுதலைக்குரிய பெருவிழாவாகக் கொண்டாடி மகிழவேண்டியது நம் கடமையே!



### யேசுவை வாழ்த்துவோம்

நத்தார் பிறந்ததடி தோழியரே — எங்கள்
நாதன் கிறிஸ்து புகழ் பாடுங்களே.
மாமரியாள் பெற்ற பாலகனை — நீங்கள்
வாழ்த்தி வாழ்த்திப்புகழ் பாடுங்களே — நத்

மந்தைத் தொழுவத்தில் பிறந்தவனை — எங்கள்
மன்மதனைப் போற்றிப் பாடுங்களே
அந்தரத்தில் நிற்கும்தூதர் சேனைகளே — நீங்கள்
அண்ணல் இயேசுபுகழ் பாடுங்களே —நத்.

பாவிகளை மீட்கப் பாரில்பிறந்தனன் — நம்
பாவம் போக்கத்தன் உயிரீந்தான்
நாம் உய்வதற் கேற்றதோர் வழிசமைத்தான் -எங்கள்
நாயகன் பாதத்தைப் போற்றிடுவோம்.

க. தங்கம்

## நத்தா... தோன்...

இன்று நத்தார்த் தி... கிறீஸ்து பிறந்த தேவார்த்தயானவர் ...மாகினார். இறைமகன் ...இரண்டாம் ஆளாகிய ... கன்னிமரியாயிடருந்து ... நாள் என்றென்றும் ... ருக்கும் கிறிஸ்து ... வடிவந் தாங்கி தாவீத... பெத்தலேகேமில் ... கொட்டிலில் மிருகங்க... ந்து திறகவைக் கோவி... இரட்சகர் பிறந்தார். ... தார்த் தினத்தன்று ... தொழுவம் நபது ... தின் மையமாக ... றது. இக் கொண்ட... முறையை அறிமுகம் ... வைத்தவர் அசிசிப் ப... புனித பிரான்சிஸ்.

### திருச்சிலுவை வழிபாடு

புனித பிரான்சிஸ் ... வின் கண்டுபிடி. அவரி... சுவட்டில் வாழ்ந்தவர் ... ஸ்து வாழ்ந்த னிதல... தரிசித்தவர். கிறீஸ்து ... பட்ட இடங்களைப் பக... தரிசித்தவர் அவர்மு... பயனே இன்று தி... கடைப்பிடிக்கும் ... வைப் பாதை வழிபா...

### நத்தார் விழா

புனித தலங்களைத் ... பின்பு பிரான்சிஸ் ... யிலுள்ள கிறேசியோ ... இடத்தை ந்தெக்ப ... டார் கிறீஸ்துவின் ... மக்களிடம் பரப்பும் ... அவர் உள்ளத்தை ஆட்... டது நத்தார் விழா ... திருந்தது. அவ்விழா... தியருட்சியாகக் கொ... வது பற்றிய எண்ண...

அனைவருக்கும் அன்புகலந்த
நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்!
யப்பானிலிருந்து
[Fully Reconditioned]
பஸ், மினிபஸ், லொறி, வான்
இறக்குமதி செய்துகொடுக்க;
சகல மோட்டார் வாகன உதிரிப்பாகங்களுக்கு
தொடர்புகொள்ளவும்
யாழ். மோட்டார் ஸ்ரோர்
108/3, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7752

நத்தார் வாழ்த்துக்கள்!
யாழ். நகரில் தலை சிறந்தபுகைப்படப்பிடிப்பாளர்
நீண்ட காலமாக யாழ், மக்களின்
நன்மதிப்பைப்பெற்ற
லீலா ஸ்ருடியோ
190, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
திருமணத்தின்போது
மணமக்களுக்குத் தேவையான
நெற், தலைமுடி, பூச்செண்டு
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் தேவை எங்கள் சேவை.

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் – புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
அலை அலையாய் வர்ண்ணங்கள்! அழகழகாய் வர்ண டிசைன்கள் அத்தனையும் அமைந்தது கல்பனாஸ் பட்டுப்பிடவைகள்
உங்கள் தேவைகளுக்கு தலைநகரில் நியாயமான நிறுவனம்.
கல்பனாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
70, நவீன சந்தை :-: யாழ்ப்பாணம்.

# நத்தார் குடில் தோன்றிய வரலாறு



இன்று நத்தார்த் திருநாள். ...றீஸ்து பிறந்த நாள். ...வார்த்தையானவர் மாமிச ...கிறார். இறைமகன் யேசு, ...ரண்டாம் ஆளாகிய சுதன் ...ன்னிமரியாயிடருந்து பிறந்த ...ள் என்றென்றும் இறைவ ...ருக்கும் கிறிஸ்து மானிட ...வந் தாங்கி தாவீதரசனின் ...த்த லேகேமில் மாட்டுக் ...ாட்டிலில் மிருகங்கள் சூழ் ... திறக வைக்கோலின்மேல் ...ட்சகர் பிறந்தார். நத் ...ர்த் தினத்தன்று மாட்டுத் ...ாழுவம் நமது வணக்கத் ...ன் மையமாக இருக்கின் ...து. இக் கொண்டாட்ட ...றையை அறிமுகம் செய்து ...வத்தவர் அசிசிப் பதியரான ...னித பிரான்சிஸ்.

## ...ருச்சிலுவை ...ழிபாடு

...புனித பிரான்சிஸ் கிறீஸ்து ...ன் கண்ணுடி. அவரின் அடிச் ...ட்டில் வாழ்ந்தவர். கிறீ ...து வாழ்ந்த ஸ்தலங்களைத் ...சித்தவர். கிறீஸ்து பாடு ...ட இடங்களைப் பகதியோடு ...சித்தவர் அவர்முயற்சியின் ...லே இன்று திருச்சபை ...டப்பிடிக்கும் திருச்சிலு ...வப் பாதை வழிபாடு.

## ...த்தார் ...ழா

...புனித தலங்களைத் தரிசித்த ...பு பிரான்சிஸ் இத்தாலி ...லுள்ள கிறேசியோ என்ற ...த்தை நோக்கிப் புறப்பட் ...ர் கிறீஸ்துவின் அன்பை ...களிடம பரப்பும் ஆவல் ...வர் உள்ளத்தை ஆட்கொண் ...நத்தார் விழா அண்மித் ...ந்தது. அவ்விழாவை பத் ...ருட்சியாகக் கொண்டாடு ...பற்றிய எண்ணங்கள் அவர் உள்ளத்தில் உருப்பெற்றன. கிறீஸ்தவின் பிறப்பை தத்ரூபமான காட்சியாக நடுச்சாம நேரத்தில் கிறேசியோ என்னுமிடத்தில் நடாத்துவது பற்றி யோனுடன் ஆலோசித்தார். காட்சிக்குத் தேவையான யாவற்றையும் தான் தருவதாக அவன் கூறினன் நத்தார்க்குடிலைச் சமைத்தான். தேவதாய் சூசையப்பரின் சிலைகளைச் செதுக்கினன். தனது மந்தையிலிருந்து ஆடு, மாடு, கழுதை என்பனவற்றைக் கொண்டு வந்தான். புனித பிரான்சிஸ் திவ்விய பாலன் சுரூபத்தைத் தயார் செய்தார்.

## நத்தார் குடில்

சிறப்பான இடத்தில் நத்தார்க் குடிசைக்காட்சி அமைக்கப்பட்டது. மேற்படி விழவுக்கு அர்த்த ராத்திரியில் விளக்குகளைக் கையேந்தி பெருந்திரளாக மக்களும் துறவிகளும வந்தனர். புனித பிரான்சிஸ் திருப்பலியில் தியாக்கோனைக் கடமையாற்றினு. மனித அவதாரப் பரம இரகசியத்தை விளக்கினுர். கிறீஸ்தவின் பிறப்பையும் திருத்தாயார் சூசையப்பர் அனுபவித்த கஷ்டங்களையும் விளக்கினுர். தேவ தூதர்களின் நற்செய்தியையும் ஆயர்களின் தரிசனத்தையும விளக்கினர் ஈடும் இணையுமற்ற அன்பின் சிகரமான திவ்விய பாலனின் சுரூபத்தை மக்களுக்குக் காண்பிப்பதற்காக பூசிபமாக எடுத்தார். என்ன ஆச்சரியம்!] புனிதர் கைகளிலேந்திய திருச்சுரூபம் திரு குழந்தையாக மாறியது. புன்சிரிப்புடன் புனித திருக்கரத்தால் பிரான்சிஸ்சின் முகத்தைத் தடவி அணைத்தது பிரசன்னமாயிருந்தோர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர் வெறுமையான உள்ளங்கள் இறை அன்பால் நிறைந்தன. இறை அன்பை அள்ளிப்பருகின புனித பிரான்சிஸ் அன்று (1223 ல்) ஆரம்பித்த நத்தார்க்குடில் படிப்படியாக உலகின் எல்லாப் பாகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு இன்று ஆலயங்களில் மாத்திரமன்றி இல்லங்களையும் அலங்கரிக்கின்றது.


...ன்புகலந்த ...வாழ்த்துக்கள்!
...நந்து
...ditioned]
...லாறி, வான்
...கொடுக்க;
...திரிப்பாகங்களுக்கும்
...ள்ளவும்
...ர் ஸ்ரோர்ஸ்
..., யாழ்ப்பாணம்.
... 7752



...த்துக்கள்!
...கப்படப்பிடிப்பாளர்கள்
...ழ், மக்களின்
...ப்பெற்ற
...டியோ
யாழ்ப்பாணம்.
...போது
தேவையான
பூச்சென்டு
...காள்ளலாம்.
...ங்கள் சேவை.


# கடவுள் எம்மீது அன்பு வைத்தார்

கிறிஸ்மஸ் சம்பவத்தின் நடுமையமான சத்தியம் கடவுள் எம்மேல் அன்பு வைத்தார் என்பதே. தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்று யோவான் தீர்க்கதரிசி கூறுகிறார். அந்த அன்பை இயேசுவின் மானிட அவதாரத்தின் மூலமாயும், அவருடைய சிலுவையின் தியாகத்தின் மூலமாயும் சந்தேகத்துக்குச் சற்றேனும் இடமில்லாமல் தெளிவாக்கியிருக்கிறார். அவர் தம்முடைய ஜிவனை நமக்காகக் கொடுத்ததனுலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் இயேசுவின் இந்த மாபெரும் அன்புக்கு மாறுத்தரமாக நாம் செய்யக் கூடியதென்ன? நமது வாழ்க்கையை அவருக்குப் படைப்பதொன்றேயாகும்!

இவ்வாறு நல்லூர் பரி யாக்கோபு ஆலயக் குருவும் இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கனுமான அருட்திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் திருச்சபையாருக்குவிடுத்துள்ள நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுளளார்.

அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

''கடவுள் யேசுக்கிறிஸ்து நமக்காக முடபத்துமூன்று வருடங்களைச் செலவிட்டார். நாம் அவருக்கு எவ்வளவு நேரத்தைக் கொடுக்கிறோம். ஒரு நாளை எடுத்துக் கொள்வோமானல் அதில்எவ்வளவு நேரத்தை வேதம் வாசிப்பதிலும், தியானிப்பதிலும், ஜெபம் செய்வதிலும், பிறருக்குச் சேவை செய்வதிலும் செலவிடுகிறோம்? நாம் அவருக்கு அதிக நேரத்தைக் கொடுக்காவிடில் அவர் சாயலாக மாற்றப்படுவது கூடாத காரியமாகும்

'நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் ஜோதிகளின் பிதாவிடத்திலின்று இறங்கிவருகிறது'' என்று யாக்கோபு தீர்க்கதரிசி கூறுகிறர் கடவுள்தந்தவரங்களை அவர் மகிமைக்காகவும், முதன் முதலாக உபயோகிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அருட்திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகள்

## நத்தார் ஆராதனைகள்

(அரியாலை)

சுண்டிக்குளி புனித யோவான் ஆலய நத்தார் புதுவருட ஆராதனைகள் வருமாறு:

இன்று 25ம் திகதி நத்தார் தினம் காலை 7மணிக்கு பரிசுத்த நற்கருணையும், பிரசங்கமும் காலை 10-30 மணிக்கு பரிசுத்த நற்கருணையும, பிரசங்கமும மாலை 2:ப திகதி புனிதர்ஸ் தேவான் திருநாள் மாலை5 மணிக்கு வாலிபர் சங்கம் நடாத்தும் இதய தாக நிகழ்ச்சி 27 ந் திகதி புனிதர் யோவான் திருநாள் காலை 7 மணிக்கு பரிசுத்த நற்கருணை ஆராதனை 28ம் திகதி சபையின் வாலிபர் சங்கமும், மகளிர் சங்கமும் யாழ் சிறைச்சாலையில் நடாத்தும் நத்தார் நிகழ்ச்சி 31 ம் திகதி இரவு 11-45 மணிக்குவிழிப்பிரா ஆராதனை தைமாதம் 1ம் திகதி விருத்த சேதனத் திருநாள் காலை 7மணிக்கு பரிசுத்த நற்கருணையும் பிரசங்கம் ஆகியன நடைபெறும்.

நத்தார் விழ வைக் கொண்டாடும் நாம் இறை அன்பின் உச்சக்கட்டமாக உள்ளன்புடன் ஒருவரை ஒருவர் நேசிப்போம். அயலவரிடம் அன்பைப் பகிர்ந்துகொள்ளுவோம், ஏழைகளின் புன்சிரிப்பில் இறைவனைக் காணுவோம், தூய்மை உள்ளத்துடன் இறைவனைத் துதிப்போம். பூவுலகில் நல் மனமுள்ளவர்களுக்கு அமைதி உண்டாகுக!

-பங்குத் தந்தை-சுன்னுகம்


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
நத்தார்-புதுவருட நல்வாழ்த்துக்கள்!
இத் திருநாளில் உங்கள் இதயம்கவர்ந்த
தங்க, வைர நகைகளைத்
தெரிவுசெய்ய மறவாதீர்கள்...
பொ. அம்பலவாணர்
தங்க, வைர, நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.
போன்: 7199 தந்தி: 'வைரம்'



அனைவருக்கும் அன்புகலந்த
நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்!
அழகிய பவுண் நகைகள், தங்கப்பவுண், வைரங்கள்
ஆகியவற்றுக்கு
கே. என். எம்.
மீரன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னதிட்டி, போன்: 585) யாழ்ப்பாணம்.



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அன்புகலந்த நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்!
கவர்ச்சியான இழை - சொகுசான ஓட்டம்
நீடிய பாவனை - உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றிற்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேண் இன்டஸ்றீஸ்
112, ஸ்ரான்லி ரேட், (போன்: 7158) யாழ்ப்பாணம்.



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கலந்த
கிறிஸ்மஸ்-புதுவருட நல்வாழ்த்துக்கள்!
சென்ற வருடங்களைப்போல் என்றும் சேவை செய்வோம்
எம்மிடம் ஜப்பான் விக்ரர் கம்பனியாரின்
உன்னத தயாரிப்பிலான
J.V.C. ரேடியோக்கள் ருஇன் வண்
J.V.C. ரெலிவிஷன் கறுப்பு,வெள்ளை, கலர் 12''14''17''20'' அளவுகளில்
J.V.C. வீடியோ டெக்
J.V.C. வீடியோ ரேப் - J.V.C. கெசற் ரேப்
J.V.C. ஸ்பீக்கர்கள்
J. V. C. மற்றும் வீடியோ ஓடியோ உப உறுப்புக்கள்
நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
J.V.C. வடமாகாண விற்பனையாளரும் பழுது பார்ப்பவர்களும்
ரேடியோ மனுவல்
121 ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 8222



...
...ட்டுப்பிடவைகள்
...ஸ்
...பாணம்.



பூக்கும் நத்தார்-புதுவருடத்தில் பூரங்காகிதம் அடையும் எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
இதயம் கலந்த நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்!
நாட்டுக்கும், வீட்டுக்கும் ஏற்ற நல்லரக பிடவைகளுக்கு மணியம்ஸை நாடுங்கள்...
மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
16, நவீன சந்தை - யாழ்ப்பாணம். போன்: 7545. கிளை: நவீன சந்தை, ஜுபிலி பஜார், யாழ்ப்பாணம்.

நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்!

# ராஜு ஸ்ரோர்ஸ்

நேரடி இறக்குமதியாளர்கள்!!!!

சோடனைச் சாமான்கள்
இறக்குமதிசெய்யப்பட்ட
நூதன விளையாட்டுப் பொருட்கள்
வெளிநாட்டு
பிஸ்கட், சொக்லட், இனிப்பு வகைகள்
மின்சாரபல்ப்(Bulb) செற்றுக்கள்
வெகுமதிப் பொருட்கள்
கேக் சாமான்கள்
சுவர், மேசை, கைக்கடிகாரங்கள்
மற்றும்
சில்லறைச் சாமான்களும் தொகையாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம்செய்யுங்கள்

போன்: 372 — ராஜு ஸ்ரோர்ஸ் — தந்தி: ராஜு
67, 69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## திணைக்களம் தாமதமாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு திணைக்களத்தினால் அமைக்கப்பட்டு வரும் சுயஉதவி வீடமைப்புத் திட்ட வீடுகளுக்கான கட்டிடப்பொருட்கள் உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை எனப் பொதுமக்கள் வட்டாரங்களில் பரவலான புகார்கள் எழுந்துள்ளன.

குறிப்பாக அண்மையில் சில வீடமைப்புத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள போதிலும் ஓடுவேய்தற்கான மரப்பொருட்கள் வழங்கப்படவில்லையாம். (அ)

## கோரிக்கை

(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியின் அருகில் மணல் எடுத்துச் செல்லத் தடை செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரி வருகின்றனர்.

பிரதான வீதியின் அருகில் மணல் எடுத்துச் செல்வதால் விபத்துக்கள் இடம்பெறக் கூடுமென்றும் மணல் எடுக்கப்பட்ட பள்ளங்களில் நீர் நிறைந்து நுளம்பு தொல்லை ஏற்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் கிராமாட்சி மன்றம்

## வழங்குநர்கள் பதிவு செய்தல் 1981.

பின்வரும் விடயங்களை வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரசித்திபெற்ற வழக்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள காகித உறைகளின் இடதுபக்க மேல்மூலையில் வழங்குநர்களைப் பதிவுசெய்தல் — 1981 எனக் குறிப்பிடப்பட்டு 9—1—81ந் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ இதன்கீழ்க் கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக்கட்டணமும் இணைக்கப்படல் வேண்டும்.

| விடயங்கள். | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 1. எழுதுகருவி வகை | 50 00 |
| 2. அலுவலக உபகரணங்கள் | 50 00 |
| 3. தளபாடங்கள் | 50 00 |
| 4. கோலவுடையும் அதற்குரிய உபகரணங்களும் | 50 00 |
| 5. அச்சிடுதல் | 50 00 |
| 6. சௌக்கியப் பொருட்கள் (மலகூட நகர சுத்தி களஞ்சியப் பொருட்கள், இரும்பு வாளிகள், தும்புத்தடிகள், ஈர்க்குக் கட்டுகள், மலகூட நகரசுத்தி வண்டில்கள் முதலியன.) | 50 00 |
| 7. சேவை இணைப்புகள் விநியோகக் கம்பிகள், தெருவிளக்கேற்றல் முதலியவற்றிற்கான மின்பொருட்கள். | 50 00 |
| 8. கட்டிடங்கள் திருத்துதலும், முது பார்த்தலும் கட்டிடம் வரைதலும் | 50 00 |
| 9. நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் | 50 00 |
| 10. சுத்திகரிப்புக்கு வண்டிலும், குப்பை ஏற்றிப் பறிப்பதற்குக் கூலியும் | 50 00 |

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்து வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும் எனினும் அவசியமாகக் காணுமிடத்து வேறு வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்யும் உரிமை மன்றத்திற்கு உண்டு. வேண்டப்படுமபோது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவாணை விடுவிக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விலைக்கூறுகளுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாகவிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கஞ் செய்யப்படும்.

ச. பொ. பாலசிங்கம்
விசேட ஆணையாளர்
நல்லூர் கிராமப் பிரதேசம்.

கிராமசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 22-12-80.

775

அனைவருக்கும் இதயம் கலந்த நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்!

கண்ணுக்கினிய நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
கருத்தைக் கவரும் நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
மாற்றுக் குறையாத நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
ஞாபகத்தில் என்றும் வைத்திருங்கள்

# ஜப்பான் ஜுவலர்ஸ்

64, கஸ்தூரியார் ரோட், போன்: 518 யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது

குதூகல நத்தார் வாழ்த்துக்கள்!

.... நாஷனல் ..... நாஷனல் .... நாஷனல்

✱ றைஸ்குக்கர் ✱ கசட்டுகள் ✱ வீடியோ றெக்கோடர்கள்
✱ 'டி. வி.' காமரா ✱ விசிறிகள் ✱ வானொலி கசட்டுகள்
✱ எயர்கொண்டிஷன் ✱ வானொலிகள் ✱ குளிர்சாதன பெட்டிகள்

மற்றும் மலிவான, பலதரப்பட்ட உள்நாட்டு
வெளிநாட்டு வானொலி, வானொலி உப உறுப்புகள்

✱ T. K. R. கார் ஸ்ரீறியோ கசட் றேடியோக்கள்
✱ BIGSTON கசட் றேடியோக்கள்

நாளுக்கோர் புதுமை! அதனை நீங்கள் நாடுவதும் உண்மை!
இந்தனைக்கும் நம்பிக்கைபெற்ற ஒரே ஸ்தாபனம்...

# வி. கே. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி, (வ லோ: 7447) யாழ்ப்பாணம்

வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது இனிய நத்தார் வாழ்த்துக்கள்!

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு விசேட கழிவுடன் கேக் செய்வதற்கு வேண்டிய பின்வரும் பொருடகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைசெய்யப்படுகின்றது.

கிலோ விபரம் வருமாறு:

1 கிலோ கஜு 62 ரூபா
1 கிலோ பிளம்ஸ் 58 ரூபா
1 கிலோ றேசின்ஸ் 37 ரூபா 50 சதம்
1 கிலோ கனடீபீவ் 23 ரூபா 50 சதம்
1 கிலோ செரிஸ் 22 ரூபா 50 சதம்
1 கிலோ பம்கின் பிறிசேவ் 23 ரூபா
1 கிலோ ஐசிங்சுகர் 19 ரூபா
1 கிலோ சொவ்ற் சுகர் 19 ரூபா
1 போத்தல் ஜின்ஜர் பிறிசேவ் 12 ரூபா
1 போத்தல் சௌவ் சௌவ் 11 ரூபா
1 போத்தல் கோல்டன் சிறப் 14 ரூபா

மற்றும் பட்டர், அஸ்ராமாஜறின், கோடியல், எசென்ஸ், ராங்க், பிஸ்கற், சாக்லற், இனிப்பு வகைகளுக்கு இன்றே விஜயம்செய்யுங்கள்...

# ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ்

141, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 660.

அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ் - புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இலங்கையிலும் அயல் நாடுகளிலும், பொறியியல் தொழில்நுட்ப வேலைகளுக்கு பெயர்பெற்ற ஸ்தாபனம்

# புரூமோட்டர்ஸ் என்ஜினியறிங் கம்பனி லிமிட்;

844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். போன்: 8006

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இனிய
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
A GRAND X'MAS RELEASE!

SANTHI (JAFFNA) 10-30, 2-30, 4-45, 7-00 a d. 9-30

How Deep is Your Love, Night Fever Staying Alive, Morethan Woman Perfomed By The Bee Gees

JOHN TRAVOLTA ✶ KAREN CORNEY
IN
SATURDAY NIGHT FEVER
A FAMILY ENTERTAINMENT
DANCE - MUSIC - SUSPENSE - THRILL - color

வர்ணஜாலம் புரியும் மின் ஒளியில் அமெரிக்க கமல் என வர்ணிக்கப்படும் JOHN TRAVOLATA வழங்குழு வும், அள்ளி வழங்கும் பொப் இசை நடனம், பொப் பிசைப் பிரியர்களுக்கு ......... அருமை விருந்து ! அரிய வாய்ப்பு!!


# தபால் ஊழியர் குறைகளைக் கேட்டறிந்தார்

(மன்னர்)

அண்மையில் மன்னருக்கு விஜயம் செய்திருந்த தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சின் நிரந்தரச்செயலாளர் திரு. ஏ. ஆர் எம். ஜயவர்த்தன மன்னார் தலைமைத்தபால் நிலையத்திற்கும் விஜயம் செய்தார். மன்னார் தலைமைத் தபால் நிலைய ஊழியர்களின் தேவைகளையும் குறைபாடுகளையும் நிரந்தரச் செயலாளர் கேட்டறிந்தார்.

அத்துடன் மடுதேவாலயத்தில்தர முயர்த்தப்பட்ட தபால் நிலையத்தினையும் உத்தியோக பூர்வமாக அவர் திறந்துவைத்தார். (அ)

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 10ம் திகதி [வியாழக்கிழமை] (25-12-80)

**மேடம்:** வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும். தொழில் துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். சிலர் வாழ்க்கையில் அரசினர் விருந்துக்கும் இடமேற்படும்.

**இடபம்:** பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள். மக்களாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. சிலருக்கு உத்தியோக உயர்வும் கிடைக்கும்.

**மிதுனம்:** சிறிய விடயத்துக்குக்கூட அதிக ஆத்தரம் ஏற்படலாம். பல வழிகளிலும் பணம் செலவாகும். நண்பர் ஒருவர் உம்மை ஏமாற்றுவதற்கு முனைவார், சிலர் அவப்பெயருக்கும் இலக்காகலாம்.

**கடகம்:** ஏமாற்று வேலைகள் இடம்பெறும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். குடும்பத்தில் அமைதி குன்றும். நன்கு ஆலோசித்ததன் பின்பே எந்த நடவடிக்கையையும் எடுக்கவும்.

**சிங்கம்:** குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைநததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும். எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள். நல்ல தினம்.

**கன்னி:** ஆக்கப் பணிகளில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும. தாய்வழிமூலம் நற்செய்தி கிடைக்கலாம். எதிர்பாராத விருந்துபசாரத்துக்கு இடமேற்படும்.

**துலாம்:** அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம்பெறலாம். நெருங்கிய உறவினர் ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுக்கு இடமுண்டு. நிதானம் வேண்டும்.

**விருட்சம்:** பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. அமைதி

(8-ம் பக்கம் பார்க்க)

இ. பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்,
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

# பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி ஒழுங்கை இல. 17ஐச்சேர்ந்த காலஞ்சென்ற மகாதேவன் செட்டியார் இலட்சுமணப் பெருமாள் செட்டியார் என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்தின் விடயத்தில்.

— மரணமெய்தியவர்

1. மாரியப்பச் செட்டியார் நாகரத்தினம் செட்டியார்.

2 பெண் சவுந்தரம் இருவரும் இல. 2 அன்ன சத்திர ஒழுங்கை, நாவலர் வீதி, யாழப்பாணம்

— மனுதாரர்கள்

மரணசாதன நியாயாதிக்கம் ) இல. 3565

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிககட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1981ம் ஆண்டு தை மாதம் 30-ம்நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியட்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுவதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

1980ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

7731


சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இனிய
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
50-வது நாளை நோக்கி
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!
நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30,
சனி, ஞாயிறு 2-15
சிவகுமார் - பிரமிளா
மதனமாளிகை

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இனிய
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
ராஜா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
வெற்றிகரமான 2வது மாதம்
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார்,
கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!
வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-15, 9-30.
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சாவித்திரி
கற்புக்கரசி

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரிவால்வர்ரீட்டா

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இனிய
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 6-00 & 9-30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்

கிறிஸ்மஸ் தினத்தை மகிழ்வுடன் கொண்டாட வேண்டிய அனைவருக்கும் அன்பு கலந்த
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்
ராணி தினசரி 1-30, 2-15, 6-00, 9-30 யாழ்ப்பாணம் 2-வது வாரம்





செவன் ஆர்ட்ஸ் அளிக்கும்
ஒருதலை காதல்
ஒரு குடும்பப் பெண்ணின் உணர்ச்சிப் போராட்டம்!

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!
வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
நினைத்தாலே இனிக்கும்

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்,
அனைவருக்கும் இனிய
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
ராணி - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
ஒருதலை காதல்
(குடும்ப ... கதை)

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!
லிடோ [யாழ்நகர்]
தினசரி 5 காட்சிகள்
REINCARNATION OF PETER PROUD

சினிமா ரசிகர்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இனிய
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
WINDSOR (JAFFNA)
Daily at 10-30 A.M., 2-00, 4-30, 7-00 & 9.30
ROBERT SHAW, PAUL NEWMAN
IN
THE STING
(Color)

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் - புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
லட்சக்கணக்கான மக்களின் அபிமானத்தைப் பெற்ற நிறுவனம்
எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்
க. பெ. எண். 101, (போன்: 284) யாழ்ப்பாணம்.

எண்ணம் போல் சைவ உணவை
சுவைத்து மகிழ்வதற்கு
அசோக் பவான்
திறமான என். ஆர். எ.
நாட்டரிசிக்கு
அசோக் பவான்
கொழும்புக்கும்
யாழ்ப்பாணத்துக்குமான
பயணச் சேவைக்கு

அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8095

# ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

### யாழ். மாநகரசபை விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகர சபையின் விசேட கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட வழிவகைகள் பற்றி இக் கூட்டத்தில் ஆலோசித்து அங்கீகரிக்கப்பட உள்ளன. (௭)

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும்,
இதயம் கலந்த
நத்தார் வாழ்த்துக்கள்

சீக்கோ டிரேடர்ஸ்
43, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 684

## இருமாதமாக பொலிசுக்கு டிமிக்கி கொடுத்தவர் கைது

(மாவிட்டபுரம்)
கற்பழிப்புச் சம்பவம் ஒன்று தொடர்பாக 2 மாதங்களாகப் பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்துத் திரிந்த 25 வயது இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு ஜனவரி 5ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

உடுவிலில் இளம் பெண் ஒருவரைப் பலவந்தமாகக் கற்பழித்ததாக உடுவிலைச் சேர்ந்த எஸ். செல்லராசா அல்லது செல்லப்பொடி என்ற சந்தேக நபரை சுன்னாகம் பொலிசார் தேடிவந்தனர்.

இந்நபரைச் சுன்னாகம் பொலிசார் கைது செய்து மல்லாகம் பதில் நீதிபதி திரு ஆர். ஜே. செல்வரத்தினம் முன் ஆஜர் செய்த சமயம் சந்தேக நபரை ஜனவரி 5ம் திகதிவரை றிமாண்டில்வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி எம். ஸ்ரீதரன் ஆஜரானார். (அ)

## பணயக் கைதிகள் விவகாரம்: ஈரானின் இறுதிக் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது!

வாஷிங்டன், டிச. 24
பணயக் கைதிகளை விடுதலை செய்வது சம்பந்தமாக அமெரிக்காவுக்கு ஈரானிய அரசு விடுத்திருந்த 2,300 கோடி டாலர் நிபந்தனையை, அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் நிராகரித்திருப்பதுடன் பணயக் கைதிகளை ஈரான் அரசு விசாரணை செய்தால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்!

பணயக் கைதிகளை விடுதலை செய்வது சம்பந்தமாக ஈரானிய அரசு அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்த கடைசிக் கடிதத்தில்; அமெரிக்காவின் பல வங்கிகளிலும் ஷாவின் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருக்கும் 2,300 கோடி டாலரையும் ஈரானுக்குத் திருப்பி அனுப்ப அமெரிக்க அரசு நடவடிக்கை எடுத்தால், இருபத்து நான்கு மணி நேரத்தில பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தது.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் திரு கார்ட்டர் நேற்று கருத்துத் தெரிவிக்கையில், ஈரானின் நிபந்தனையை ஏற்க முடியாது என்றும் ஆனாலும், பணயக்கைதிகள் விசாரணை செய்யப்பட்டால் மோசமான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என்றும், இதனால் ஏற்படும் விளைவுகளை ஈரான் எதிர்நோக்கவேண்டும் என்றும் எச்சரிக்கைசெய்துள்ளார்.

இதுசம்பந்தமாக வெள்ளை மாளிகை இன்று வெளியிட்ட அறிக்கையில், ஈரானின் நிபந்தனைகளுக்குச் செவிசாய்ப்பது, அமெரிக்க சட்டங்களை யே மீறுவதாகும் என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தடுப்புக் காவலில் தங்களது இரண்டாவது நத்தார்தினத்தை அனுஷ்டிக்கும் அமெரிக்கப் பணயக் கைதிகளுக்கு நத்தார்தினத்தன்று விசேட பிரார்த்தனை அளிக்க ஈரானிய மதகுருமார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தனியார் மருத்துவக் கல்லூரிக்கு இதுவரை 600 விண்ணப்பங்கள்
### வெளிநாட்டிலிருந்து 100 பேர்

(கொழும்பு)
கொழும்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது தனியார் வைத்தியக் கல்லூரிக்கு இதுவரை உள்நாட்டிலிருந்து 500 விண்ணப்பங்களும் வெளிநாடுகளில் இருந்து 100 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன என்று ...

முதலில் இக் கல்லூரியில் 150 மாணவர்களே அனுமதிக்கப்படுவார்கள். இவர்களில் பத்துவீதமானோரே வெளிநாட்டினர் என்றும் இக் கல்லூரி அதிகாரி ஒருவர் கூறினர்.

வடகொழும்பு மருத்துவக் கல்லூரி என பெயரிடப்பட்டுள்ள இக் கல்லூரியில் அடுத்த ஆண்டு அக்டோபரில் விரிவுரைகள் ஆரம்பமாக இருக்கிறது.

இக் கல்லூரியில் சேரவிரும்பும் மாணவர்கள் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சையில் இரசாயனம், பௌதிகம், விலங்கியல் ஆகிய பாடங்களில் சித்தியும் தாவரவியல் அல்லதுகணிதத்தில் 25 வீத புள்ளியுமாக மொத்தம் 160 புள்ளிகளைப்பெற்றவர்கள் இக் கல்லூரியில் அனுமதிகோரி விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## மூளாய் ஆஸ்பத்திரிக்கு 'எக்ஸ்-றே' கருவிபெற்றுத்தர யாழ். அரசாங்க அதிபர் உறுதி

(யாழ்ப்பாணம்)
மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு ஒரு 'எக்ஸ்-றே' கருவி அவசியம் என்பதை உணர்கிறேன். எனவே வெளிநாட்டு தூதுவராலயம் ஒன்றுடன் தொடர்பு கொண்டு இந்த ஆஸ்பத்திரிக்கு தேவையான 'எக்ஸ்-றே' கருவியைப் பெற்றுத்தர ஆவன செய்வேன்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. ய. கேந்திரா துரைசுவாமி உறுதி அளித்தார்

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரிச்சபையின் தலைவராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலனுக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தர்மபாலனின் சேவையையும் பாராட்டிய அரசாங்க அதிபர், இதனால் தாமும் பெருமையடைவதாகவும் கூறினார்.

இவ்வைபவத்திற்கு தலைமை வகித்த இன்றைய தலைவர் திரு. வை. இராசசுந்தரம் பேசுகையில், மூளாய் ஆஸ்பத்திரிக்கு அண்மையில பல அரசாங்க ஆஸ்பத்திரிகள் இருப்பதாலும் நாட்டில் வைத்திய நிபுணர்கள் போதாமையினாலும் இந்த ஆஸ்பத்திரி பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே இந்த ஆஸ்பத்திரியின் நிலையை சுகாதார அமைச்சருக்கு எடுத்துக்கூறி நன்கொடை பெற்றுத்தர அரசாங்க அதிபர் முன்வரவேண்டும் என்றுகூறி திரு. தர்மபாலனின் சேவையையும் பாராட்டினார்.

உபதலைவர் திரு. எம். எஸ். கந்தையா தமதுரையில், சிறந்த நிர்வாகத்திறனும் சுயநலமற்ற சேவை மனப்பான்மை கொண்ட திரு. தர்மபாலன் ஓர் இக்கட்டான நிலையில் இருந்த இ ஆஸ்பத்திரியை ஒரு நலவழிநிலைக்குக்கொண்டுவந்தமைக்காக இப் பகுதி மக்கள் அவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளனர் என்றும் அவர் வெளியிலிருந்தாலும் தொடர்ந்தும் இந்த ஆஸ்பத்திரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.

வைத்திய நிபுணர் சி. சி. பாலசுப்பிரமணியமும் உரையாற்றினார்.

திரு. தர்மபாலன் தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக்கு நன்றி தெரிவித்துப் பேசினார். (இ)

### யாழ். மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மாவட்டத்தில் வாழ்கின்றார்கள். அவர்களிடையே நிலவும் சீரிய நட்புறவு, சமய நம்பிக்கை, சேவை மனப்பான்மை, அத்தனையையும் கொண்டு, சிறப்பானதோர் தார்மீக சமுதாயத்தை உருவாக்க இன்றும் என்றும் முடியுமென நான் நம்பிக்கையுடையேன். அவர்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை நல்குகின்றேன்.''

### கலவான எம். பி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கருத்தில் கொள்ள வேண்டும் ... என்றும் அசுகடித்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது. (ம-இ)

### இன்றைய பலன்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)
யான நடவடிக்கைகள் மூலம் மற்றவர்களுடைய நட்பைப் பெறுவீர்கள். வீட்டிலும் மதிப்பு உயர்வதற்கு இடம் உண்டு.

தனு: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலை வாரிவிடக்கூடும். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்.

மகரம்: குழுமையான சம்பவம் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும் களஸ்திர வழியால் இலாபமும் கிடைக்கும்.

கும்பம்: எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

மீனம்; தந்தைவழி ஆதரவு தவறுமல் கிடைக்கும். தடைகள் எல்லாம் தவிடுபொடி. தனிக்கொடி பறக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## குருமகராஜ்பிரார்த்தனை இன்றுமுதல் ஞாயிறுவரை நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)
குரு மகாராஜ்ஜியின் பக்தர்கள் அனைவரினதும் விசேட பிரார்த்தனை உரும்பராய் தெய்வீக ஒளிச்சங்கத்தில் இன்றிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்கள் நடைபெறும்.

இப்பிரார்த்தனை வைபவத்தில் இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள குருமகாராஜ்ஜியின் பக்தர்கள் கலந்துகொள்ளுகிறார்கள்.

இதுவரை உலகிற் பல நாடுகளிலும் குருமகராஜ்ஜியும் அவரின் பக்தர்களும் நிகழ்த்திய உண்மைச் சம்பவங்கள் 'வீடியோ' படக்காட்சி மூலம் காண்பிக்கப்படும். குருவின் சீடர்களின் தெளிவானதத்துவ விளக்கங்களும் இடம்பெறும். (ச)

## யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர்களுக்கு இரண்டு மாத போனஸ்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர்களுக்கு 2 மாதச் சம்பளத்தை போனஸ்ஸாக வழங்குவதென்றும் பங்காளர்களுக்கு 18 வீத லாபப் பணம் வழங்குவதென்றும் மேற்படி சங்கப் பங்காளர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. வி. எம். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற பங்காளர் கூட்டதின்போது, பல ஆண்டுகள் சங்கத்தலைவராக இருந்து அண்மையில் காலமான டாக்டர் கனகரத்தினத்திற்கு அஞ்சலி செலுத்துமுகமாக 2 நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது

அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்ட 70 ரூபா விசேடபடியை வழங்கவேண்டுமென இயக்குநர் சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு பங்காளர் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

பங்காளர் கூட்டத்தில் ஊழியர்களுக்கு 2 மாதச் சம்பளத்தை போனஸாக வழங்குவதென்றும், பங்காளர்களுக்கு லாபப்பணத்தில் 18 வீதம் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்தாபனம் பல ஆண்டுகளாக பங்காளர்களுக்கு ஆரம்பத்தில் ஆறுவீத லாபப்பணம் கொடுத்து வந்தது பின்னர் 12 வீத லாபப் பணமும் கொடுத்து வந்தது. முடிந்த ஆண்டுக்கு 18 வீத லாபப்பணம் கொடுப்பதென தீர்மானித்துள்ளது. (கொ)

## சண்டிகா ஹோமம்

(யாழ்ப்பாணம்)
அம்பிகையின் அருட்திருவிளையாடல்களை விமர்சிப்பதும் இம்மை மறுமை இரண்டிற்கும பயன்தரக்கூடியதுமாகிய ''தேவீமாஹாத்மீய'' (சண்டிகாஹோம) பாராயண வகுப்புக்கள் இன்று காலை முதல் இணுவில் தமசாஸ்தா குருகுலத்தில் நடைபெற்று வரும்.

பிராமண சமாஜத்தின் ஆதரவில் இலவசமாக நடைபெற்று வரும் இவ்வகுப்பை ஆசிரியர் பிரம்மஸ்ரீ தா மகாதேவசர்மா நடாத்துகிறார்கள். (இ)

### தி. மு. க..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
''விவசாயிகளின் உத்தேசமறியல் நடவடிக்கை தொடர்பாக பலர் கைது செய்யப்படும்போது, விவசாயிகள் என்ற போர்வையில் அரசியல் கட்சி உறுப்பினர்களும் கைது செய்யப்படுகின்றனர்'' என்றும் திரு. மு. கருணாநிதி கவலை தெரிவித்தார்.

பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி ஆரம்பம். 27-12-80 சனி, ஞாயிறு வகுப்புக்கள். அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, றொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7754

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General PostOffice Sri Lanka. under No: GE 8948/78. The Eelanaadu. P. B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389.